DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : ஜெயலட்சுமி | Father/Husband Name : ராமகிருஷ்ணன் |
| Age : 80 | Village : ஓ.மேட்டுப்பட்டி |
| Taluk : சாத்தூர் | Calling : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 Mar 2026 14:20

(Accused not present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed)

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் ஓ.மேட்டுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய கணவர் பி.டி.ஓ. ஆக வேலை செய்து வந்தார். ஆகையால் என்னுடைய கணவர் வேலை செய்த ஊர்களில் நாங்கள் வசித்து வந்தோம். குழந்தைகளும் எங்களுடன் இருந்தார்கள். அவர்கள் படிப்பு முடித்தவுடன் வேலைக்கு சென்றுவிட்டார்கள். ஆகையால் ஊரில் யாரும் இருக்கவில்லை.

2. என்னுடைய கணவர் எங்களுக்கு ஓ.மேட்டுப்பட்டியில் இருந்த இடத்தை குருசாமி படையாச்சி என்பவருக்கு மேற்பார்வை பார்ப்பதற்காக கொடுத்திருந்தார். மேற்படி குருசாமி படையாச்சி எங்களுடைய பெயரில் இருக்கக்கூடிய நிலத்தை அவருடைய பெயருக்கு மாற்றிக்கொண்டார். எங்களுடைய நிலத்தை கடந்த 40 ஆண்டுகளாக மாரிச்சாமி தான் எங்களுக்காக மேற்பார்வை செய்து வருகிறார்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**</u>

3. என்னுடைய கணவர் மீது உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 109/2013 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த வழக்கில் என்னுடைய கணவர் இறந்த பிறகு எங்களை பிரதிவாதிகளாக சேர்த்தார்கள் என்றால் எனக்கு எதுவும் தெரியாது, மாரிச்சாமிக்கு தான் தெரியும். சொத்தின் சர்வே எண் மற்றும் அளவு எனது தெரியாது என்றால் சரிதான். யார் பெயரில் பட்டா இருந்தது என்பதும், என்னுடைய கணவர் எந்த ஆண்டு நிலத்தை கொடுத்தார் என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் யாருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

18 Mar 2026 14:27

Judicial Magistrate 2, Sattur